பாரதியார் பல்கலைக்கழக மாணவர்கள் விடுதிக் கட்டணம் உயர்வு

வடவள்ளி, நவ.17: கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் மாணவ, மாணவிகள் தங்கிப் படிக்கும் விடுதிக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. உயர்த்தப்பட்ட விடுதி கட்டணத்தை குறைக்க வேண்டும் என்று மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் 13 விடுதிகள் உள்ளன. இவற்றில் 2,500-க்கும் மேற்பட்ட ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த வெளியூர் மாணவர்கள் தங்கி, முதுநிலை மற்றும் ஆராய்ச்சி படிப்புகளை பயின்று வருகின்றனர். இந்நிலையில் கடந்த ஜூலை மாதம் வரை மாத வாடகையாக ரூ.200 வசூலிக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது ரூ.500-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இதேபோல விடுதியில் தங்குவதற்கான வைப்புத்தொகை ரூ.8,700-லிருந்து ரூ.10 ஆயிரமாகவும், விடுதி மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பக் கட்டணம் ரூ.10-லிருந்து ரூ.100-ஆகவும், ஆண்டு பராமரிப்பு கட்டணம் ரூ.200-இல் இருந்து ரூ.1,000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து விடுதி மாணவர்கள் கூறும்போது, சென்னை பல்கலைக்கழகத்தில் கூட இந்த அளவுக்கு விடுதிக் கட்டணம் உயர்த்தப்படவில்லை. மின்சாரம், குடிநீர், பராமரிப்புப் பணிகள் என பல்வேறு காரணங்களை கூறி கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. விடுதிகளை நம்பியுள்ள ஏழை, எளிய மாணவர்கள் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த பெற்றோர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் உயர்த்தப்பட்ட விடுதி கட்டணத்தை குறைக்க வேண்டும் என்றனர்.

முன்னாள் விடுதி மாணவர் ஒருவர் கூறும்போது, 'பாரதியார் பல்கலைக்கழகம் விடுதி பராமரிப்புக்காக பல லட்சம் ரூபாய் ஒதுக்குகிறது. இருப்பினும், மாணவர்களிடம் தனியாக பராமரிப்பு கட்டணம் வசூலிக்கப்படுகிறது. விடுதிகளில் ஏதேனும் பராமரிப்புப் பணி மேற் கொள்ள வேண்டியிருந்தாலும், ஏற்கெனவே மாணவர்கள் செலுத்திய கட்டணத்தை பயன்படுத்தாமல், அவர்களிடமே கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்றார்.

பல்கலைக்கழக பதிவாளர் ராஜவேல் கூறியதாவது: கடந்த 2007-ஆம் ஆண்டுக்கு பிறகு 19 ஆண்டுகள் கழித்து தற்போதுதான் விடுதிக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. கட்டணத்தை நிர்ணயிப்பதற்கு முன்பு 3 பல்கலைக்கழகங்களின் விடுதிக் கட்டண விவரங்களை ஆய்வு செய்தோம். பல்கலைக்கழகத்தின் 13 விடுதிகளில் சமையலர்கள், சமையல் உதவியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் என 80-க்கும் மேற்பட்டோர் பணியாற்றி வருகின்றனர். மாணவர்களிடம் வசூலிக்கப்படும் கட்டணத்தின் மூலமே இவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ.16 ஆயிரம் முதல் ரூ.18 ஆயிரம் வரை ஊதியம் வழங்க வேண்டியுள்ளது. எனவே நிர்வாக செலவுகளை கருத்தில் கொண்டு இந்தக் கட்டண உயர்வு தவிர்க்க முடியாதது என்றார்.

காரமடை கே.ஆர். பப்ளிக் பள்ளியில் அறிவியல் கண்காட்சி



காரமடை கே.ஆர். பப்ளிக் பள்ளியில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியைப் பார்வையிட்ட பள்ளியின் செயலர் மதுமதி, முதல்வர் தீபா உள்ளிட்டோர்.

மேட்டுப்பாளையம், நவ. 17: மேட்டுப்பாளையம் அருகேயுள்ள காரமடை கே.ஆர். பப்ளிக் பள்ளியில் அறிவியல் கண்காட்சி சனிக்கிழமை நடைபெற்றது.

'ஜெவிஆர் ரோபோடிக்ஸ்& எலக்ட்ரிக்கல் ஹேண்ட்ஸ்-ஆன் டிரெய்னிங்' சார்பில் நடைபெற்ற இந்தக் கண்காட்சியில் ரத்தினம் தொழில் நுட்பக் கல்லூரியின் முதன்மையர் பேராசிரியர் பி.சிவபிரகாஷ், உற்பத்தி பிரிவின் தலைமையாளர் மதியழகன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்றனர்.

பள்ளித் தாளாளர் கே. கல்யாணசுந்தரம், பள்ளி செயலாளர் மதுமதி, பள்ளியின் முதல்வர் தீபா, நிர்வாக அலுவலர் மகேஷ், ஜெவிஆர் ரோபோடிக்ஸ் இயக்குநர் விக்னேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில், மாணவர்கள் ரோபோடிக்ஸ் மற்றும் மின்சாரக் கருவிகள் சார்ந்த படைப்புகளைக் காட்சிப்படுத்தினர். சிறந்த படைப்புகளுக்கு பரிசு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மக்களின் அடிப்படை பிரச்னைகளுக்குத் தீர்வு காணக் கோரி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆர்ப்பாட்டம்

கோவை, நவ. 17: மாநகரில் மக்களின் அடிப்படை பிரச்னைகளுக்குத் தீர்வு காண வலியுறுத்தி, மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலகம் முன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாநகராட்சியில் மக்களின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்ற மத்திய, மாநில அரசுகள் நிதி ஒதுக்க வலியுறுத்தியும், அடிப்படைப் பிரச்னைகளை நிறைவேற்றக் கோரியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் செவ்வாய்க்கிழமை கிழக்கு மண்டல அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதையடுத்து, மாநகராட்சி அலுவலகத்தில் அளிக்கப்பட்ட மனுவில் கூறியிருப்பதாவது: மாநகரம் முழுவதும் குப்பைகளை அப்புறப்படுத்திட தேவையான தூய்மைப் பணியாளர்களை நியமித்து வீடுகளில் தினமும் குப்பை சேகரிப்பதை உத்தரவாதப்படுத்த வேண்டும். பாதாள சாக்கடை பணிகளுக்காக தோண்டப்பட்ட சாலைகள் உள்ள குழிகளை சரி செய்யாமல் இருப்பதால் சாலை விபத்து ஏற்படும் அபாயம் உள்ளது. சாலைகளை பழுது நீக்கி புதுப்பிக்க வேண்டும். அனைத்து பூங்காக்களையும் சிறுவர்கள் விளையாட்டுவதற்கு ஏற்ற பூங்காக்களாக தரம் உயர்த்தி தர வேண்டும். சாக்கடைகள் தூர்வாரி முழுமையாக பராமரிக்க வேண்டும்.

தூர்வாரும் நேரத்தில் மண் உள்ளிட்ட கழிவுகளை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் குறித்து குறிப்பட்டப்பட்டிருந்தது.

மேட்டுப்பாளையத்தில்...

மேட்டுப்பாளையம் மற்றும் காரமடை நகராட்சி அலுவல கங்கள் முன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மத்திய, மாநில அரசுகளின் நிதி முடக்கத்தை கண்டித்து செவ்வாய்க் கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் மேட்டுப்பாளையத்தில் பாதாள சாக்கடை பணிகள் விரைந்து முடித்து திட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும். மேட்டுப்பாளையத்தில் 8 இடங்களில் சாக்கடை நீர் பவானி ஆற்றில் கலப்பதை தடுக்க வேண்டும். நகரத்தின் தூய்மையை பாதுகாக்க வேண்டும்.

மேலும், காரமடை நகராட்சியில் மூன்றாவது குடிநீர்த் திட்டம் அமல்படுத்த வேண்டும். காரமடை நகராட்சி பகுதிகளில் சாலை வசதி இல்லாமல் குண்டும் குழியுமாக உள்ள பகுதிகளில் சாலை வசதி ஏற்படுத்தி தர வேண்டும். தூய்மைப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

மேட்டுப்பாளையம்நகராட்சி அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மேட்டுப்பாளையம் வட்டாரச் செயலாளர் மெகர்நிஷா, காரமடை நகராட்சி அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு நகராட்சி உறுப்பினர் பிரியா ஆகியோர் தலைமை வகித்தனர்.



மக்களின் அடிப்படை பிரச்னைகளுக்குத் தீர்வு காண வலியுறுத்தி, கோவை மாநகராட்சி கிழக்கு மண்டல அலுவலகம் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர்.

காரில் தவறவிட்ட நகையைத் திருடி விற்ற ஓட்டுநர் கைது

வால்பாறை, நவ.17: வாடகைக்கு காரில் தவறவிட்ட நகையை திருடி விற்ற ஓட்டுநரை போலீஸார் கைது செய்தனர்.

வால்பாறையை அடுத்த கரு மலை எஸ்டேட்டில் பணியாற்றி வருபவர் தங்கமுத்து. இவர் கடந்த வாரம் தீபாவளி பண்டிகைக்காக குடும்பத்துடன் ஊருக்கு செல்ல கருமலை எஸ்டேட்டை சேர்ந்தவரின் காரை வாடகைக்கு எடுத்துச் சென்றுள்ளார்.

அப்போது, கொண்டுச் சென்ற பையை காரில் தவறவிட்டுள்ளார். அதில் 4 பவுன் நகை இருந்துள்ளது. சில தினங்கள் கழித்து நகை காணாமல்போனது குறித்து தெரியவந்து வீட்டில் தேடியுள்ளார். ஆனால், நகை கிடைக்க வில்லை.

இதையடுத்து கார் ஓட்டுநர் மீது சந்தேக்கப்பட்டு வால்பாறை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இது குறித்து கார் ஓட்டுநரும், உரிமையாளருமான கார்த்தி கேயன் (26) என்பவரிடம் போலீஸார் தீவிர விசாரணை மேற் கொண்டனர். அப்போது, காரில் தவறவிட்ட நகையைத் திருடி விற்றதை அவர் ஒப்புக்கொண்டார். இதையடுத்து,போலீஸார் கார்த்தி கேயனை கைது செய்து விற்பனை செய்த நகைகளை மீட்டனர்.

போத்தனூர் வழித்தடத்தில் காக்கிநாடா - கொல்லம் இடையே சிறப்பு ரயில்

கோவை, நவ. 17: சபரிமலை சீசனை முன்னிட்டு ஆந்திர பிரதேச மாநிலம், காக்கிநாடாவில் இருந்து கேரள மாநிலம் கொல்லத்துக்கு போத்தனூர் வழித்தடத்தில் சிறப்பு ரயில் இயக்கப்படுவதாக ரயில்வே நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, சேலம் ரயில்வே கோட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

நவம்பர் 19-ஆம் தேதி முதல் 2027 ஜனவரி 21-ஆம் தேதி வரை வியாழக்கிழமைகளில் காலை 8.20 மணிக்கு காக்கிநாடாவில் இருந்து புறப்படும் காக்கிநாடா டவுன் - கொல்லம் வாராந்திர சிறப்பு ரயில் (எண்:07233) வெள்ளிக்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கொல்லம் நிலையத்தைச் சென்றடையும்.

மறுமார்க்கமாக, நவம்பர் 21 முதல் 2027 ஜனவரி 23-ஆம் தேதி வரை சனிக்கிழமைகளில் பிற்பகல் 2.30 மணிக்கு கொல்லத்தில் இருந்து புறப்படும் கொல்லம் - காக்கிநாடா சிறப்பு ரயில் (எண்: 07234) ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு காக்கிநாடா ரயில் நிலையத்தைச் சென்றடையும்.

இந்த ரயிலானது, சாஸ்தான் கோட்டா, கருநாகப்பள்ளி, காயன்குளம், மாவேலிக்கரா, செங்கண்ணூர், திருவல்லா, சங்கணாச்சேரி, கோட்டயம், எர்ணாகுளம் டவுன், ஆலுவா, திருச்சூர், பாலக்காடு, போத்தனூர், திருப்பூர், ஈரோடு, சேலம், ஜோலார்பேட்டை, காட்பாடி, சித்தூர், தர்மாவரம், கூட்டி, குண்டூர், விஜயவாடா, ஏழூரு உள்ளிட்ட ரயில் நிலையங்களில் நின்று செல்லும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மசூலிப்பட்டினம் - கொல்லம் இடையே சிறப்பு ரயில்: சபரிமலை சீசனை முன்னிட்டு, ஆந்திர மாநிலம் மசூலிப்பட்டினத்தில் இருந்து நவம்பர் 20 மற்றும் 27 ஆகிய வெள்ளிக்கிழமைகளில் மாலை 4.30 மணிக்கு மசூலிப்பட்டினத்தில் இருந்து புறப்படும் மசூலிப்பட்டினம் - கொல்லம் சிறப்பு ரயில் (எண்: 07231) சனிக்கிழமைகளில் இரவு 9.30 மணிக்கு கொல்லம் ரயில் நிலையத்தை சென்றடையும். மறுமார்க்கமாக, நவம்பர் 22 மற்றும் 29 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2.30 மணிக்கு கொல்லத்தில் இருந்து புறப்படும் கொல்லம் - மசூலிப்பட்டினம் சிறப்பு ரயில் (எண்: 07232) திங்கள்கிழமைகளில் காலை 8.50 மணிக்கு மசூலிப்பட்டினத்தைச் சென்றடையும்.

இந்த ரயிலானது, சாஸ்தான் கோட்டா, கருநாகப்பள்ளி, காயன்குளம், மாவேலிக்கரா, செங்கண்ணூர், திருவல்லா, சங்கணாச்சேரி, கோட்டயம், எர்ணாகுளம் டவுன், ஆலுவா, திருச்சூர், பாலக்காடு, போத்தனூர், திருப்பூர், ஈரோடு, சேலம், ஜோலார்பேட்டை, காட்பாடி, ரேணிகுண்டா, கூடூர், நெல்லூர், ஒங்கோல், பாப்பட்லா, தெனாலி, விஜயவாடா, குடிவாடா உள்ளிட்ட ரயில் நிலையங்களில் நின்று செல்லும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்க்கரை நோயாளிகளுக்கு இலவச மருத்துவப் பரிசோதனை முகாம்



கோவையில் நடைபெற்ற சர்க்கரை நோயாளிகளுக்கான இலவச மருத்துவப் பரிசோதனை முகாமில் பங்கேற்றோர்.

கோவை, நவ. 17: கோவை, காளப்பட்டி சந்திரமாரி இன்டர்நேஷனல் பள்ளியில் சர்க்கரை நோயாளிகளுக்கான இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் அண்மையில் நடைபெற்றது.

பன்னாட்டு லயன்ஸ் இயக்கம் 3242 'சி' மாவட்டத்தின் தர்மம் செய் ஆண்டின் ஜி.எம்.டி. ஒருங்கிணைப்பாளர் லயன் செந்தில்குமார் தலைமை வகித்தார். மாவட்ட ஆளுநர் பி.எஸ். செல்வராஜ், சந்திரமாரி, இன்டர்நேஷனல் பள்ளி முதல்வர் சதீஷ்குமார், முதலாம் துணை ஆளுநர் சூரிநந்தகோபால், இரண்டாம் துணை ஆளுநர் பாஸ்கர், நேருநகர் நந்து (எ) பத்மநாபன், சங்கத்தின் முன்னாள் தலைவர் பாஸ்கரன் ஆகியோர் முகாமைத் தொடங்கிவைத்தனர்.

கோவை நேருநகர் லயன்ஸ் சங்கம், கோவை அரவிந்த் கண் மருத்துவமனை, டாக்டர் ராஜேந்திரன் டயாபட்டிக் சென்டர், டாக்டர் தங்கதுரை கோல்டு டென்டல் மருத்துவமனை, விருக்ஷா அக்குபஞ்சர் அகாதெமி, சந்திரமாரி இன்டர்நேஷனல் பள்ளி சார்பில் நடைபெற்ற இந்த முகாமில், 100-க்கும் மேற்பட்ட சர்க்கரை நோயாளிகளுக்கு கண், ரத்தம், பல் குறித்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அரவிந்த் கண் மருத்துவமனை செய்தித் தொடர்பாளர் பழனி சாமி, மருத்துவர்கள் தன்யா, சனாபல், தங்கதுரை ராஜேந்திரன், சுகுமார், ஜிஎஸ்டி ஒருங்கிணைப்பாளர் முத்துவேல், டயாபடிக் மாவட்டத் தலைவர் கர்ணன், மகளிர் தின மாவட்ட தலைவர் சுப்பு செந்தில் குமார், வட்டாரத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, நேரு நகர் சங்கத் தலைவர் தேஜஸ்வினி உள்ளிட்டோர் முகாமை ஒருங்கிணைத்தனர்.

HDB FINANCIAL SERVICES

HDB ஃபைனான்ஸியல் சர்வீஸஸ் லிமிட்டெட்

பதிவு அலுவலகம் - ராதிகா, 2 வது தளம், லா கார்டன் சாலை, நவரங்புரா, அஹமதாபாத் - 09

கிளை அலுவலகம் - M/s. HDB ஃபைனான்ஸியல் சர்வீஸஸ் லிமிட்டெட்., எண். 9-12, உத்தம் காம்ப்ளக்ஸ், 1 வது தளம், ராஜாஜி சாலை, ராம் நகர், கோயமுத்தூர் - 641 009

ஏல விற்பனை அறிவிப்பு - விலைப்புள்ளி மற்றும் மின்னணு ஏலம்

(கடன்தாரர் / கூட்டு - விண்ணப்பதாரர் / பொது மக்களுக்கு)

(சர்ஃபாசி சட்டம்' 2002 ன் விதி 8(6) - உடன் படிக்க - விதி 9(1) ன் கீழ்)

இதன் கீழ்க்கையொப்பமிட்ட HDB ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிட்டெட் - ன் அதிகாரப்பூர்வ அலுவலர், பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைக்காப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 ன் கீழ் இதன் கீழ்குறிப்பிட்டுள்ள கடன் கணக்குக்காக பின்வரும் சொத்தை "இருக்கின்ற இடத்தில்" & "இருக்கின்ற நிலையில்" என்ற அடிப்படையில் விற்கும் உரிமையுடன் கவாதினம் எடுத்துள்ளார்.

1. விண்ணப்பதாரர் & கூட்டு விண்ணப்பதாரர் பெயர் மற்றும் முகவரி - (1). **பென்குயின் கிட்ஸ் வேர்ல்டு** பென்குயின் கிட்ஸ் வேர்ல்டு, எண். 16, செங்கட்டரணை வட்ட சாலை, மகாலிங்கபுரம், மகாலிங்கபுரம் - 642 002 தமிழ்நாடு **(2). தங்கம் வாசுதேவன்,** எண். 17/99, ரத்தினம் நகர், T. கொட்டாம்பட்டி, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி, மகாலிங்கபுரம் - 642 002 தமிழ்நாடு **(3). ஜனார்த்தனன் வாசுதேவன்,** எண். 17/99, ரத்தினம் நகர், T. கொட்டாம்பட்டி, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி, மகாலிங்கபுரம் - 642 002 தமிழ்நாடு **(4). கார்த்திக் B,** எண். 41 C, வால்பாறை சாலை, ஆழியாறு நகர், ஆழியாறு நகர் - 642 101 தமிழ்நாடு **(5). பவித்ரா ஜனார்த்தனன்,** எண். 17/99, ரத்தினம் நகர், T. கொட்டாம்பட்டி, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி, மகாலிங்கபுரம் - 642 002 தமிழ்நாடு **(6). SRB கார்டு ப்ராடக்ட்ஸ்,** SRB கார்டு ப்ராடக்ட்ஸ், எண். 151/1, பொள்ளாபுரம் சாலை, சமத்தூர் அருகில், பொள்ளாச்சி, ஆழியாறு நகர் - 642 101 தமிழ்நாடு **(7). வாசுதேவன் முத்து சுப்ரமணியம்,** எண். 17/99, ரத்தினம் நகர், T. கொட்டாம்பட்டி, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி, மகாலிங்கபுரம் - 642 002 தமிழ்நாடு **கடன் கணக்கு எண். 4493961.** மொத்த நிலுவைத்தொகை : **17.11.2026** ம் தேதியின் படி, **ரூ.47,95,839.43/-** (ரூபாய். நாற்பத்து ஏழு இலட்சத்து தொண்ணூற்று ஐந்தாயிரத்து எட்நூற்று மூப்பத்து ஒன்பது மற்றும் பைசா நாற்பத்து மூன்று மட்டும்) மற்றும் முழு தொகையையும் செலுத்தும் வரை மேற்கொண்டு வரும் வட்டி / நிகழ் செலவுகள் / செலவுகள் ஆகியன. **ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு தெரிந்த (ஏதேனும் இருப்பின்) வில்லங்கங்களின் விபரங்கள் - இல்லை**

அசையா சொத்துக்களின் விபரங்கள் :

ஜாமீன் சொத்து விபரங்கள்: கோயமுத்தூர் பதிவு மாவட்டம், பொள்ளாச்சி சார்பதிவு மாவட்டம், பொள்ளாச்சி டவுன், பல்லடம் சாலை, T S வார்டு எண். 530 மற்றும் 528, உட்பிரிவு எண். 528/B ல் அமையப்பெற்று, வீட்டுமனைகளடங்கிய "ரத்தினம் நகர்" என பெயரிடப்பட்ட இடத்தில் உள்ள பிளாட் எண். 99. இதன் எல்லைகளாவன பின்வருமாறு - வடக்கு - பிளாட் எண். 100, தெற்கு - பிளாட் எண். 98, கிழக்கு - பிளாட் எண். 90, மேற்கு - தென்வடல் சாலை. இவைகளுக்கு மத்தியில் உள்ள அளவிடுகளாவன : கிழமேல் வடக்கு - 83-1/2 அடி., கிழமேல் தெற்கு - 88-1/2 அடி., தென்வடல் கிழக்கு - 40 அடி., தென்வடல் மேற்கு - 4 அடி., என மொத்தம் 3440 சதுர அடி மற்றும் அதனுடன் கூடிய அதில் கட்டப்பட்ட கூட்டம் மற்றும் பாதை உரிமைகள் உள்ளிட்ட அனைத்தும். வடக்கு - பிளாட் எண். 100, தெற்கு - பிளாட் எண். 98, கிழக்கு - பிளாட் எண். 90, மேற்கு - தென்வடல் சாலை.

அடிப்படை விலை	டேவணித்தொகை	விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை	ஏல தேதி & நேரம்	டேவணித்தொகை செலுத்த கடைசி தேதி
ரூ.1,27,16,300/-	ரூ.12,71,630/-	ரூ.1,00,000/-	23.12.2026 காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை	22.12.2026 மாலை 05.00 மணி வரை

விலைப்புள்ளி மற்றும் ஏல விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் :

(1). ஏல விற்பனையானது வலைதளம் https://www.bankeauctions.com மூலம் "Online-e-auction" வாயிலாக இதன் மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தேதிகளில் எண்ணிடலான 5 நிபந்தனை நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடத்தப்படும். (2). விருப்பமுள்ள ஏதேனும் தங்களது டேவணித்தொகையை வலைதளம் https://www.bankeauctions.com மூலம் பயனாளி அடையாளம் மற்றும் கடவுச்சொல் வாயிலாக சமர்ப்பிக்க வேண்டும். (பயனாளி அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை தங்களது பெயரை வலைதளம் https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்). அசையா விலையின் 10% தொகையை டேவணித்தொகையாக பே ஆர்டர் மூலம் / "HDB Financial Services Limited" என்ற பெயருக்கு எடுக்கப்பட்ட கேட்பு வரைகோல மூலம் செலுத்த வேண்டும். எதேனால் வலைதளத்தில் தும்ப பதிவு (ஒரு முறை) செய்த பிறகு, விருப்பமுள்ள ஏதேனார் / வாய்ப்பபர் பின்வரும் ஆவணங்களில் நகல்களை, விலைப்புள்ளி ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதிமற்றும் நேரத்துக்கு முன்பு வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். அவையாவன i). NEFT/ RTGS சலான் அல்லது கேட்பு வரைகோல நகல் ii). நிரந்தர கணக்கு அட்ட iii). அடையான சான்று / முகவரி சான்று (KYC) அதாவது வாக்காளர் அடையான அட்ட / ஓட்டுனர் உரிமம் / கடவுச்சீட்டு போன்றவை இவையன்றி வரும் விலைப்புள்ளிகள் தள்ளுபடி செய்யப்படும். முறையாக நிரப்பப்பட்டு, கையொப்பமிட்ட பிரச்சேர்க்கை II & III ஆகியவற்றின் ஒளிருபடப்பட்டு பதிவேற்றம் செய்யப்படும் நகல்களை வலைதளம் https://www.bankeauctions.com லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். உள்ளூறை அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை உருவாக்குவதிலோ, தகவல்களை பதிவேற்றம் செய்வதிலோ விலைப்புள்ளி ஆவணங்களை சமர்ப்பிப்பதிலோ, பயிற்சி / ஆன்லைன் உள்ளரு விலைகோழுக்கான செய்முறை விளக்கம் பெறுவதிலோ உதவி தேவைப்படும் விருப்பமுள்ள ஏதேனார்கள், **C1 INDIA PRIVATE LIMITED,** பிளாட் எண். 68, 3 வது தளம், கெல்டர் - 44, குர்கான், ஹரியானா - 122003 மின்னஞ்சல் முகவரி : **support@bankeauctions.com** . தொடர்பு நபர் பெயர் / மின்னஞ்சல் முகவரி மற்றும் தொடர்பு எண் : **1. திரு தரணி கிருஷ்ணா / andhra@c1india.com , தொலைபேசி எண். 9948182222** யை தொடர்பு கொள்ளலாம். **3).** ஏலத்திற்கு விருப்பமுள்ள ஏதேனார்கள் நேரில் ஆஜராகி தனிப்பட்ட முறையில் பங்கேற்று, எழுத்து பூர்வமாக அவர் தனக்காக விலைகோருகிறார் என எழுத்து பூர்வமாக அறிவிக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட நபர் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. **4).**விருப்பமுள்ள ஏதேனார்கள், மேலாளர், HDB ஃபைனான்ஸியல் சர்வீஸஸ் லிமிட்டெட், எண். 9-12, உத்தம் காம்ப்ளக்ஸ், 1 வது தளம், ராஜாஜி சாலை, ராம் நகர், கோயமுத்தூர் - 641 009 அவர்களிடமிருந்து விலைப்புள்ளி படிவங்களை பெற்றுக்கொள்ளலாம். **5).** விருப்பமுள்ள ஏதேனார்கள், தங்களது விலைப்புள்ளிகளை உரிய விலைப்புள்ளி படிவத்தில் நிரப்பி, முத்திரையிட்ட உறையிட்டு, அதிகாரப்பூர்வ அலுவலர், HDB ஃபைனான்ஸியல் சர்வீஸஸ் லிமிட்டெட் - கு முத்திரைபட்டு, அடிப்படை விலையின் 10% ஐ **"HDB Financial Service Limited"** என்ற பெயருக்கு எடுக்கப்பட்ட பே ஆர்டர் / கேட்பு வரைகோலையாக எடுக்கப்பட்ட டேவணித்தொகையுடன், இத்துடன் அறிவிக்கப்பட்ட விலைப்புள்ளி மற்றும் ஏல விற்பனை தேதியான **22.12.2026** அன்று மாலை 05.00 மணி அல்லது அதற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும். **6).** சொத்து மற்றும் இதர விபரங்களை ஆய்வு செய்ய, வாய்ப விருப்பமுள்ள நபர்கள், **M/s. HDB ஃபைனான்ஸியல் சர்வீஸஸ் லிமிட்டெட்., எண். 9-12, உத்தம் காம்ப்ளக்ஸ், 1 வது தளம், ராஜாஜி சாலை, ராம் நகர், கோயமுத்தூர் - 641 009 திரு. மணிகண்டன் - 8220855303, திரு. ஏஞ்சித் - 9952535434 ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். சொத்து 'இருக்கின்ற இடத்தில்' மற்றும் 'இருக்கின்ற நிலையில்' என்ற அடிப்படையில் விற்கப்படுகின்றன. 7).** முத்திரையிட்ட விலைப்புள்ளிகள், விருப்பமுள்ள ஏதேனார்கள் முன்னிலையில், இதுதான் அறிவிக்கப்பட்ட விலைப்புள்ளி மற்றும் ஏல விற்பனை தேதியான **23.12.2026 அன்று காலை 11.00 மணிக்கு** திறக்கப்படும். சொதுகை விற்பனையானது முழு விலைப்புள்ளிகளின் வாயிலாக நடைபெறும் போதிலும், அதிகாரப்பூர்வ அலுவலர், தனது சொந்த அதிகாரத்தின் பேரில், மூழு விலைப்புள்ளிகளாக வாய்ப்பற்ற விலைப்புள்ளியை விட அதிகமான விலை கோர விளையும், விருப்பமுள்ள ஏதேனார்கள் மத்தியில் திருந்த வெளி ஏலம் நடத்தலாம், அவ்வாறு நடைபெறும் போது, விற்பனை அதிகபட்ச விலைகோரும் நபருக்கே உறுதிபடுத்தப்படும். எனினும், விற்பனை **HDB ஃபைனான்ஸியல் சர்வீஸஸ் லிமிட்டெட்** - ன் உறுதிபடுத்துதலுக்கு கட்டுப்பட்டதாகும். **8).** வெற்றி பெற்ற ஏதேனார், விற்பனை உறுதிபடுத்தப்பட்டதன் பேரில், விற்பனை தொகையில் 25% ஐ (டேவணித்தொகை உட்பட) உடனடியாக அதே நாளில் அல்லது அடுத்த வேலை நாளுக்கு மீறி தாமதமாகாமல் செலுத்த வேண்டும்., மீதி 75% தொகையை விற்பனை உறுதிபடுத்தப்பட்ட தேதியிலிருந்து **15 நாட்களுக்குள்** செலுத்த வேண்டும். தவறும் பட்சத்தில், தொடக்கத்தில் செலுத்திய 25% தொகை அபாதமாக கருதி வழிக்கப்படும். எக்காரணத்தைக்கொண்டும் அதிதொகை திருப்பித்தரப்பட மாட்டாது. வெற்றி பெற்ற ஏதேனார், மேற்சொன்னவாறு, மொத்த ஏலத்தொகையில் 25% செலுத்த தவறும் பட்சத்தில், அந்தத வெற்றி பெற்ற ஏதேனார் பரிசீலிக்கப்படுவதோடு, அவர் விற்பனையை முடிக்க உரிமையுடையவராவார். **9).** விற்பனைச்சான்று, அதிகாரப்பூர்வ அலுவலரால், வாய்ப்புவதில் வெற்றி பெற்றவர் பெயரில் பட்டே விற்பனைத்தொகையை, இதில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவுக்குள், முழுமையாக பெறப்பட்ட பிறகே வழங்கப்படும். **10).** வாங்குவதில் வெற்றி பெற்றவரே பரிமாற்றத்துக்கு சட்டப்படி பொருத்தக்கூறாது. செலுத்தப்ப வேண்டிய முத்திரை தீர்வை, பதிவு கட்டணம் போன்ற கட்டணங்கள் / செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். **11).** சட்ட ரீதியில் செலுத்த வேண்டிய (சட்டப்படியான வீட்டு வரி, மின் கட்டணங்கள் மற்றும் இதர நிலுவைகள்) TDS, GST போன்றவற்றை எதேனும் அரசுக்கோ அரசு நிறுவனத்துக்கோ உள்ளாட்சி அமைப்புக்களுக்கோ செலுத்த வேண்டியிருப்பின் அவற்றை வெற்றி பெற்ற ஏதேனார் செலுத்த வேண்டும். **12).**அதிகாரப்பூர்வ அலுவலர், எக்காரணமும் கூறாமல், விலைப்புள்ளி அலலது ஏலப்புள்ளிகளில் ஏதேனும் அலலது அனைத்தையும் ஏற்றுக்கொள்ள அலலது ரத்து செய்யவும், ஏலத்தை ஒத்தி வைக்க / தள்ளி வைக்க / ரத்து செய்யவும், எக்காரணமும் கூறாமல், விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றவும், எந்த முன் அறிவிப்புமின்றி, விற்பனைக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்றவும் உண்டான அதி